

பெரம்பலூர் மாவட்டம், வேலூர் கிராமத்தில் உள்ள அரசு ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கு எம்.பி. நிதியிலிருந்து மாநிலங்களவை உறுப்பினர்கள் பி.வில்சன் ரூ.37 இலட்சமும், திருமதி ராஜாத்தி (எ) சல்மா ரூ.47 இலட்சமும் வழங்கியுள்ளனர். இப்பணிகளுக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் – மேனாள் ஒன்றிய அமைச்சருமான ஆ. இராசா எம்.பி. அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார். இதில் மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம். பிரபாகரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா. ப. பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் தழுதாழை பாஸ்கர், ஆசிரியர் பச்சமுத்து மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



உடுமலைப்பேட்டையில் அமைந்துள்ள திருப்பூர் தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்ற கழக மறுசீரமைப்புக்கான திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ. சாமிநாதன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் கே.ஈஸ்வரசாமி எம்பி., கழக கொள்கைப் பரப்பு இணைச் செயலாளர் வி.சி.சந்திரகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.ஜெயராமகிருஷ்ணன் (மடத்துக்குளம்), மு. ஜெயக்குமார் (உடுமலைப்பேட்டை), கழக ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி உள்பட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் பலர் கலந்துகொண்டனர்.

33 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தஞ்சைப் பெரியார், முன்னாள் அமைச்சர்

மன்னை ப.நாராயணசாமி

அவர்கள்

17.10.2026



"எறும்பனையர் எம் மறவர்
இன்னனையர் நம் மன்னை"
– பேரறிஞர் அண்ணா

"மன்னை எனது அன்னை"
– முத்தமிழ் அறிஞர்
கலைஞர்

..... என்றும் உங்கள் வழியில் பேரன் .....

மன்னை த.சோழராஜன் B.E.,

நகர்மன்றத் தலைவர் – மன்னார்குடி

(மாநில மாணவர் அணி துணைச் செயலாளர்)

மோடி வீக்கமும் - விஜய் வீக்கமும்!

பணவீக்கம் என்றால் என்ன?

விலைவாசி உயர்வையும், பணமதிப்புக் குறைவையும் விளக்கும் ஒரு சொல்.

உடலின் எப்பகுதியில் வீக்கம் ஏற்பட்டாலும், அது நோயின் அறிகுறி என்றுதானே நாம் அச்சப்படுகிறோம். மருத்துவரை அணுகிச் சிகிச்சை பெறுகிறோம்.

அன்றாட வாழ்வில் தொடர்ந்து விலைகள் உயரும்போது, இதுவும் பொருளாதார நோயின் அறிகுறி என நாம் உணர வேண்டும்.

எனவேதான் பணவீக்கம் என்ற சொல், விலைவாசி உயர்வு, பணமதிப்புச் சரிவு ஆகிய இரண்டையும் அடை யாளப்படுத்துகிறது.

இந்தப் பணவீக்கத் தாக்குதல் ஏழைகளையும், நடுத்தரப் பிரிவினரையும் வாட்டி வதைக்கிறது.

"ஒவ்வொரு பொருளின் விலையும் நேரத்திற்கு நேரம், இடத்திற்கு இடம் ஏறியும் இறங்கியும் வருகிறது.

அத்தகைய ஒவ்வொரு மாற்றத்தின்போதும், அந்தப் பொருளைப் பொறுத்தவரை பணத்தின் வாங்கும் திறனும் மாறுகிறது" என்று

பணவீக்கம் தொடர்பான விளக்கத்தை அளித்தார் பொருளாதார அறிஞர் ஆல்பிரட் மார்ஷல்.

(The price of every thing rises and falls from time to time and place to place; and with every such change the purchasing power of money changes so far as that thing goes. Alfred Marshall)

மார்ஷல் குறிப்பிட்ட இந்தக் கருத்து, இந்தியாவின் பொருளாதார நிலைகளில் இன்றும் கோலோச்சி வருகிறது.

ஒன்றிய அரசில் மோடி ஆட்சிக்கு வந்து 12 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.

தமிழ்நாட்டில் விஜய் ஆட்சிக்கு வந்து 5 மாதங்கள் கடந்துவிட்டன.

2026 சட்டமன்றத் தேர்தலின் போது, விஜய் மேடைதோறும் உச்சக் குரலில் தி.மு.க. ஆட்சியை மட்டுமே குறைகூறி ஏசினார்.

கொள்கை எதிரி பா.ஜ.க. என்று அறிவித்து பரப்புரை செய்தார்.

ஆனால் இன்றோ, புதுதில்லியில் இளைஞர்களின் போராட்டத்தின் மீது காவல்துறையை ஏவிக் கடும் தாக்குதல்களை நடத்தி, மெட்ரோ இரயில் சேவையை மூடி, பல இலட்சம் மக்களை இன்னல்களுக்கு உள்ளாக்கிவிட்டு, தமிழ்நாட்டுக்கு வந்த பிரதமர் நரேந்திர மோடியை,

முதல்வர் விஜய் விமான நிலையத்துக்கே சென்று பூங்கொத்து வழங்கி, வணங்கி வரவேற்றார்.

ஆனால் தமிழ்நாட்டில் மெட்ரோ திட்டத்தை கொண்டு வந்ததே

கலைஞர் முதல்வராக இருந்த போது

தி.மு.க. ஆட்சியில் தான் என்பதை நல்லவர்களும் நாடும் மறந்து விடவில்லை.

சென்ற வாரம் பிரதமர் மோடியால்

தொடங்கப் பட்ட திட்டம் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் முதல்வராக இருந்த போது வடிவமைக்கப்பட்டு முடிக்கப்பட்ட திட்டம்.

முதல்வர் விஜய் இவ்விழாவில் முன்னாள் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினுக்கு நன்றி கூறியிருக்க வேண்டும்.

நடிகரிடம் நாகரிகத்தை
எதிர்பார்க்க முடியாதல்லவா!

தேர்தல்தில்லுமுல்லுகள் வழியாகச் ஜனநாயகத்தை சிதைத்து சீரழிவு செய்து வரும் மோடிக்கு,

சங்கிகளே அதிர்ந்து போகும் அளவிற்கு சென்னையில் வரவேற்பு அளித்தார் விஜய்.

இந்தியாவில் நடந்தது என்ன?
நடப்பது என்ன?

மக்கள் நுகரும் எந்த முதன்மையான பொருளின் விலையும் ஏற்றம் கண்டதே ஒழிய, இறக்கம் காணவில்லையே!

வாழ்நிலையில் இறக்கத்தை மட்டுமே மக்கள் கண்டு வருகின்றனர்.

மோடி ஆட்சியில், பெட்ரோல் மீதான ஒன்றிய அரசின் தீர்வை வரி, 2014இல் லிட்டருக்கு Rs.9.48 என்ற அளவிலிருந்து 2020இல் Rs.32.98 என மூன்று மடங்குக்கும் மேலாக உயர்த்தப்பட்டது.

மார்ச் 2026இல் தீர்வை வரியை லிட்டருக்கு Rs.10 குறைத்ததாக ஒன்றிய அரசு அறிவித்தபோதும், அதன் பயன் நுகர்வோருக்குச் சென்று சேரவில்லை; சில்லறை விலை ஒரு பைசா கூடக் குறையவில்லை.

2026 மே 15 முதல் 25 வரையிலான பத்தே நாட்களில், ஒன்றிய அரசின் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் நான்கு முறை பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தின.

மே 15 அன்று ஒரே நாளில் லிட்டருக்கு Rs.3 உயர்த்தப்பட்டது; அதனைத் தொடர்ந்து மே 19, 23, 25 ஆகிய நாட்களிலும் விலை ஏற்றப்பட்டது.

இதனால் தில்லியில் பெட்ரோல் விலை Rs.94.74இலிருந்து Rs.102.12 ஆக, லிட்டருக்கு Rs.7.38 உயர்ந்தது.

சென்னையில் இன்று பெட்ரோல் லிட்டருக்கு Rs.107.76, டீசல் Rs.99.55 என விற்கப்படுகிறது;

பத்து நாட்களில் லிட்டருக்குச் சுமார் Rs.7 உயர்வு.

எரிபொருள் விலை உயர்வு சரக்குப் போக்குவரத்துச் செலவை உயர்த்தி, அரிசி முதல் காய்கறி வரை அன்றாடப் பொருட்களின் விலையையும் உயர்த்து கிறது.

உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்த காலத்திலும், அதன் பயன் மக்களுக்குச் சென்று சேரவில்லை.

திராவிட மாடல் ஆட்சியில், 2021 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13 அன்று அன்றைய முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், பெட்ரோல் மீதான மாநில விற்பனை வரியை லிட்டருக்கு Rs.3 குறைத்து தமிழ்நாட்டில் விலை உயர்வைக் கட்டுப்படுத்தினார்.

எரிபொருள் விலை உயர்வு, ஒன்றிய அரசின்
வரிச்சுமை ஏற்றத்தால் ஏற்பட்ட விளைவு!

சந்தைப் பொருளாதாரத்திற்குச் சப்பைக்கட்டு கட்டும் அமெரிக்கப் பொருளாதாரப் பேராசிரியர் மில்டன் ஃப்ரீட்மேன், "பணவீக்கம் என்பது சட்டத்தின் வழியே அறிவிக்கப்படாத வரிச்சுமை" (Inflation is taxation without legislation) என்றார்.

ஆனால், வரிச்சுமை வழியாகப் பணவீக்கத்தை வானுயர உயர்த்திய பெருமை மோடிக்கே உரியது.

தி.மு.க. ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்ட மெட்ரோ இரயிலில் பிரதமர் மோடியோடு பயணம் செய்த தமிழ்நாட்டின் முதல்வர் விஜய், விலைவாசி உயர்வுக்கு அடிப்படைக் காரணமாக உள்ள பெட்ரோலியப் பொருட்கள் மீதான ஒன்றிய அரசின் தீர்வை வரியைக் குறைக்கக் கோரிக்கை வைத்திருக்கலாம்.



பேராசிரியர்
மு.நாகநாதன்

இ ர ஷ் ய ா வி லி ரு ந் து இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெய்யைச் சுத்திகரித்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அம்பானி பெரும் லாபம் ஈட்டுவதற்குத் துணைபோகும் பிரதமரே, எங்கள் கட்சியின் முன்னாள் கொள்கை எதிரியே, இந்நாள் கொள்கை வழி காட்டியே, மக்களுக்காக இந்த வரிக் குறைப்பை நீங்கள் செய்யக்கூடாதா என்று பணி வோடு கேட்டிருக்கலாமே!

எரிபொருள் விலை உயர்வு, போக்குவரத்து உட்படப் பல பொருளாதாரக் காரணிகளின் விலை ஏற்றத்திற்குப் பல்வேறு நிலைகளில் வழி வகுக்கிறது.

பணவீக்கத்திற்குப் பல பரிமாணங்கள் உண்டு:

தவழ்ந்து செல்லும் பணவீக்கம் (Creeping inflation)

நடை வேகத்தில் செல்லும் பணவீக்கம் (Walking inflation)

ஓடும் பணவீக்கம் (Running inflation)

பாய்ந்து செல்லும் பணவீக்கம் (Galloping inflation)

தேவை ஆர்வப் பெருக்கத்தால் ஏற்படும் தேவை இழுப்புப் பணவீக்கம் (Demand pull inflation)

செலவு உந்து பணவீக்கம் (Cost push inflation)

எந்தப் பெயரிட்டு அழைத்தாலும், மேற் குறிப்பிட்ட பல்வகை பணவீக்கம் இன்று இந்திய மக்களின் வாழ்வாதாரத்தைச் சீரழித்து வருகிறது.

தமிழ்நாட்டில், மற்ற மாநிலங்களில் காணப்படாத அளவிற்கு விலை உயர்வு ஏற்பட்டு வருகிறது.

அரிசி, சர்க்கரை, பால்,எண்ணெய், பருப்பு வகைகள், காய்கறிகள், பழங்கள் ஆகியவற்றின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

இத்தகைய விலை உயர்வை
இங்கிலாந்து சந்தித்த போது!

சந்தைப் பொருளாதாரத்தைப் போற்றும் நாடுகளுக்கு, பொருளாதார அறிஞர் கெயின்ஸ் ஓர் எச்சரிக்கை விடுத்தார்.

"முதலாளித்துவ அமைப்பை அழிப்பதற்குச் சிறந்த வழி, நாணயத்தின் மதிப்பைச் சீரழிப்பதே" என்று புரட்சியாளர் லெனின் கூறியதாகச் சொல்லப்படும் கருத்து சரியானதே என அவர் ஒப்புக்கொண்டார்.

மேலும் கெயின்ஸ், "தொடர்ந்த பணவீக்கத்தின் மூலம், அரசுகள் குடிமக்களின் செல்வத்தில் கணிசமான பகுதியை, இரகசியமாகவும் யாரும் அறியாமலும் கைப்பற்ற முடியும்" என்றும் குறிப்பிட்டார்.

இந்த விளக்கங்களையும் தாண்டி, பெருகி வரும் வருமான ஏற்றத்தாழ்வு, வேலையின்மை, வறுமை, போதிய ஊட்டச்சத்து இல்லாமல் பெரும்பாலான மக்கள் படும் துயரம் ஆகியவற்றைக் கணக்கிட்டால், பணவீக்கமும் விலைவாசி உயர்வும் மக்கள் மீது பல்முனைத் தாக்குதல்களை நடத்தி வருகின்றன என்பதைக் காணலாம்.

இன்றைய மோடி அரசும், விஜய் அரசும் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தத் தவறியது மட்டுமல்ல, ரீல்ஸ் போட்டு மக்களை ஏமாற்றலாம் என்று நாடகம் ஆடுகின்றன.

மக்களை நீண்ட நாள் ஏமாற்ற முடியாது என்பதற்கு, ஜந்தர் மந்தரில் நடைபெறும் இளைஞர்களின் போராட்டம் எச்சரிக்கை மணியை ஓங்கி ஒலித்து வருகிறது.